2020 பிப்ரவரி 19]

அதிகளவில் மாணவர்கள் பயன் பெறுவார்கள். ஆகவே, இதை உடனடியாக விரைவுபடுத்தி, இந்தாண்டே இந்தப் பணியைத் துவக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கோரிக்கை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, இந்த ஆண்டே நிறைவேற்றுவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

முற்பகல் 11–35

3. தகவல் கோரல்

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்ட டெல்டா பகுதிகளில் புதிய மற்றும் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட ஹைட்ரோ கார்பன் திட்டங்களுக்கு அனுமதி மறுத்திடும் வகையில் தீர்மானம் நிறைவேற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டா மாவட்டங்கள் பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவிக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 9 ஆம் தேதி தெரிவித்திருக்கிறார்கள். அவர் அப்படி தெரிவித்த நேரத்தில், புதிய ஹைட்ரோ கார்பன் திட்டங்களுக்கு அனுமதி*

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2020 பிப்ரவரி 19*

கொடுக்கமாட்டோம் என்று கூறியிருந்தாரே தவிர, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய ஹைட்ரோ கார்பன் திட்டங்கள் குறித்து எதையும் குறிப்பிடவில்லை என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதுமட்டுமல்ல; 10–2–2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்திலும் அதுபற்றிக் குறிப்பிடவில்லை. எனவே, அனுமதிக்கப்பட்டிருக்கின்ற ஹைட்ரோ கார்பன் திட்டங்களையும்—ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டிருக்கின்ற ஹைட்ரோ கார்பன் திட்டங்களையும்—இரத்து செய்தால்தான் பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலம் என்ற அறிவிப்பு சாலச் சிறந்ததாக அமைந்திட முடியும்; சிறப்பாகவும் இருக்க முடியும்.

இதுகுறித்து மக்களவையிலும், மாநிலங்களவையிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். அப்படிக் கேள்வி எழுப்பிய நேரத்தில், சம்பந்தப்பட்ட மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் இதற்கு எந்த பதிலையும் சொல்லவில்லை. அதுமட்டுமல்ல; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதுகுறித்து இதுவரை தெளிவுபடுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே, அனுமதிக்கப்பட்ட ஹைட்ரோ கார்பன் திட்டங்களை இரத்து செய்தும், இனிமேல் புதிய ஹைட்ரோ கார்பன் திட்டங்கள் வராத வகையில் ஒரு சட்டமுன்வடிவை இதுவரையிலும் ஏன் கொண்டுவராமல் இருக்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி. ஏற்கெனவே, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் 16–1–2020 அன்று வெளியிட்டிருக்கக்கூடிய அந்த அறிவிப்பில் காவேரி டெல்டா பகுதியில் ஹைட்ரோ கார்பன் திட்டங்களுக்கு பொது மக்களுடைய கருத்துக்கேட்பு தேவையில்லை என்று தெரிவித்துள்ளது. அதனை விலக்கிக்கொள்ளுமாறு நீங்கள் வலியுறுத்தியிருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல; மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள், 10–2–2020 அன்று ஒரு கடிதத்தினை மத்திய அரசிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

ஆகவே, நான் கேட்க விரும்புவது, பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலம் தொடர்பான சட்டமுன்வடிவுகளை இன்னும் இரண்டு நாட்களில் நிறைவேற்ற வேண்டும். இன்றும், நாளையும்தான் சட்டமன்றம் நடைபெற இருக்கின்றது. எனவே, அதனை மசோதாவாக, தீர்மானமாகக் கொண்டுவந்து இந்த

2020 பிப்ரவரி 19] [திரு. மு.க. ஸ்டாலின்]

சட்டமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். அப்படி அதனை நீங்கள் வலியுறுத்துகின்றபோது நிச்சயமாக, உறுதியாக, திராவிட முன்னேற்றக் கழகம் முழு அளவிற்கு ஆதரவினைத் தரத் தயாராக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; பாராளுமன்றத்திலே எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிச்சயமாக இதுகுறித்து வலியுறுத்தி, வற்புறுத்தி, உறுதியாகப் பேசுவார்கள். எனவே, அந்தவகையில் நான் இந்தப் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கும், இந்த அரசினுடைய கவனத்திற்கும் தங்கள் வாயிலாகக் கொண்டுவந்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்டா பாசன விவசாயிகள், டெல்டா பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக மாற்றி அறிவிக்க வேண்டும் என்று அரசுக்குத் தொடர்ந்து கோரிக்கை வைத்து வந்தனர். அவர்களுடைய கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, அண்மையில் தலைவாசல் கூட் ரோடு அருகில் நடைபெற்ற புதிய கால்நடைப் பூங்கா துவக்க விழா நிகழ்ச்சியில் நான் பேசும்போது, 'டெல்டா பகுதிகள் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக மாற்றப்படும்' என்ற அறிவிப்பை நான் வெளியிட்டேன். இதுசம்பந்தமாக சட்ட நிபுணர்களுடன் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் மகிழ்ச்சியடையும் வகையில் ஒரு நல்ல செய்தி விரைவில் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள் (குறுக்கீடுகள்) அப்புறம் பார்க்கலாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இது தொடர்பாக தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரவேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை வைத்திருக்கிறேன். அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. ஏனென்றால்*

இன்றும், நாளையும் இரண்டு நாட்கள்தான், சட்டமன்றம் நடைபெறவிருக்கின்றது. இன்று மாலையில்கூட அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவிருப்பதாக செய்தியை நாங்கள் பார்த்தோம். எனவே, ஒரு நல்ல முடிவு வரும் என்ற கருத்தின் அடிப்படையில்தான் இதை நான் வலியுறுத்தியிருக்கிறேன். எனவே, நாங்கள் மட்டுமல்ல; டெல்டா பகுதியில் இருக்கக்கூடிய வேளாண் பெருங்குடி மக்களும் இதனை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நேற்றைக்குக்கூட இதே அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "நாடாளுமன்றத்தில் குரல் கொடுங்கள்; குரல் கொடுங்கள்" என்று வீராவேசமாக, உணர்ச்சியோடு இங்கே சொன்னார்கள். அதனால் நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் குரல் கொடுக்கத் தயாராக இருக்கின்றது என்பதை மீண்டும் பதிவு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு தங்கள்மூலம் மீண்டும் இதைக் கொண்டுவருகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–40

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டவுடனேயே இதற்குண்டான பணிகள் எல்லாம் தொடங்கிவிட்டன. சரியான முறையிலே சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்துத்தான் இதைக் கொண்டுவர முடியும். ஏனென்றால், இதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. நீங்கள் ஏற்கெனவே பல செய்திகளையெல்லாம் சொல்லியிருக்கின்றீர்கள். அதையெல்லாம் விவரமாக சட்ட வல்லுநர்களுடன் விவாதித்து, நீங்கள் சொல்லியபடியே சட்டமன்றத்தின் மூலமாக இதற்கு என்னென்ன அங்கீகாரம் கிடைக்க வேண்டுமோ, அதையெல்லாம் செய்வதற்குத்தான் நாங்கள் முயற்சி செய்கின்றோம். நிச்சயமாக நீங்கள் நினைக்கிறபடி அனைத்தும் செயல்படுத்தப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*